தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 19-4-2018

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தேங்காய் மற்றும் கொப்பரையின் விலை இந்த கோடைக்காலத்தை சூடாக்கும்

இந்தியாவில், மலைத்தோட்ட பயிர்களின் மொத்தப் பரப்பளவில் தேங்காய் சுமார் 58 சதவீதம் பங்களிக்கின்றது. தேசிய தோட்டக்கலை வாரியம் 2017-18 ஆம் ஆண்டின் முதல் முன்கூட்டிய மதிப்பீட்டின் படி, தேங்காய் 20.82 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 164.93 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படுவதாக அறியப்படுகிறது. இந்தியாவின் மொத்த உற்பத்தியில் கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் ஆந்திரா ஆகிய மாநிலங்கள் சேர்ந்து 91 சதவீதம் பங்களிக்கின்றது.

அமெரிக்கா ஐக்கிய வேளாண் துறை (USDA) அறிக்கையின் படி, 2017 -18ஆண்டு இந்தியாவின் தேங்காய் எண்ணெய் உள்நாட்டு நுகர்வு 4.32 இலட்சம் டன்களாகும். இவை கடந்த ஆண்டைவிட 4சதவீதம்அதிகமாகும். தேங்காய் மற்றும் தேங்காய் பொருட்களை ஐக்கிய அரபு நாடுகள், ஐக்கிய நாடுகள், குவைத் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு அதிகளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது. தேங்காய் எண்ணெய் விலை கடந்த சில மாதங்களிலிருந்தே ஏறுமுகமாகவே உள்ளது. இப்பருவத்தில் தேங்காய் அதிக அளவு உற்பத்தி செய்யும் மாநிலங்களிலில் உற்பத்தி குறைவாகவே உள்ளது. இதன் விளைவாக தேங்காய் மற்றும் கொப்பரை விலைகள் உயர வாய்ப்புள்ளது.

தமிழ்நாட்டில், கோயம்புத்தூர், திருப்பூர், தஞ்சாவூர், திண்டுக்கல் மற்றும் கன்னியாகுமரி ஆகியவை தேங்காய் உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும். இம்மாவட்டங்களிலிருந்தும், கேரளாவிலிருந்தும் தேங்காய் மற்றும் கொப்பரைவரத்து ஏற்கனவே வரத்தொடங்கியுள்ளது. மேலும், கர்நாடகாவிலிருந்து ஜீன் மாதம் முதல் வரத்து வரத்தொடங்கும் எனஎதிர்பார்க்கப்படுகிறது. வர்த்தகஆதாரங்களின் படி, தமிழ்நாடு மற்றும் கேரளாவின்

விரைவான நகரமயமாக்கல் மற்றும் அடிக்கடிஏற்படும் சூராவளிகலின் காரணமாக தேங்காய் பரப்பு மற்றும் உற்பத்தியானது கணிசமாககுறைந்துள்ளது. மேலும், கேரளா சந்தையில் தேங்காய் எண்ணெயின் விலை உயர்ந்தால் தேங்காயின் தேவைகள் அதிகரிக்கும்.

இச்சூழலில், விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், இயங்கிவரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுதிட்டத்தின்படி கீழ் இயங்கி வரும், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டம், கடந்த 18 ஆண்டுகளாக ஈரோட்டில் உள்ளஅவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைகூடத்தில் நிலவிய தேங்காய் மற்றும் கொப்பரையின் விலை மற்றும் பெருந்துறை கூட்டுறவு விற்பனை மையத்திலும் சந்தை ஆய்வுகள் மேற்கொண்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் மே, 2018 முதல் ஜீன் 2018 வரை தரமான தேங்காயின் பண்ணைவிலை ரூ.20முதல் ரூ.23/- வரை மற்றும் நல்ல தரமான கொப்பரை கிலோவுக்கு ரூ. 130,-முதல் ரூ.135/- ஆகவும் இருக்கும். எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

உள்நாட்டுமற்றும் ஏற்றுமதிசந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரகமேம்பாட்டுஆய்வு மையம்,
தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி - 0422-2431405

**தொழில்நுட்பவிவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்,
வாசனைமற்றும் மலைத்தோட்டபயிர்கள்துறை,
தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641 003.
தொலைபேசிஎண் - 0422-6611284

மக்கள் தொடர்பு அலுவலர்